**தேனி மாவட்டம் வைகை அணை - மூன்றாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை மற்றும் உபரிநீர் வைகை ஆற்றில் திறப்பு**

தேனி மாவட்டம் வைகை அணையில் 71 அடி மொத்த உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் 06.11.2021 காலை 10.00 மணியளவில் 66.00 அடியாக உயர்ந்ததைத் தொடர்ந்து முதல்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது.

இன்று 09.11.2021 காலை 9.00 மணியளவில் நீர்மட்டம் 68.50 அடியாக உயர்ந்ததைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது.

வைகை அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து உள்ள காரணத்தால் வைகை அணையின் நீர்மட்டம் இன்று 09.11.2021 இரவு 10.00 மணிக்கு 69.00 அடியாக உயர்ந்தவுடன் மூன்றாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு அணைக்கு வரும் உபரிநீரில் வினாடிக்கு 1000 கன அடி வீதம் வைகை ஆற்றில் திறந்துவிடப்படும்.

வைகை ஆற்றின் கரையோரம் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கும் ஆற்றில் யாரும் இறங்கவோ குளிக்கவோ வேண்டாமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Scanned with CamScanner